<u>(சார்பு நீதிமன்றம்) செஞ்சி</u>

**ஓ.எஸ்.எண்.130/2017** **நாள்.22.06.2023**

2023 ம் ஆண்டு ஜுன் திங்கள் 22 ம் நாள் வாதி தரப்பு 1 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராதா | தொழில் | |
| த. பெ./க.பெ. | மாணிக்கம் | சாதி | |
| கிராமம் | மேல்களவாய் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 55 |

**<u>வ.சா.1</u>**

**<u>குறுக்கு விசாரணை</u>**

அய்யாதுரை என்பவர் எனது மாமனார். அய்யாதுரைக்கு ஏழுமலை, விஜயா, குமார் ஆகியோர் வாரிசுகள். அய்யாதுரை மகன் ஏழுமலை என்பவர் அரசு பேரூந்தில் நடத்துனராக வேலை செய்து வருகிறார். ஏழுமலையும், அய்யாதுரையும் ஒன்றாக வசித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. அய்யாதுரையை ஏழுமலை தான் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. அய்யாதுரை குடும்பத்தை பற்றி முழுவிவரம் எனக்கு தெரியும். அய்யாதுரை மேல்களவாய் கிராமத்தில் சொத்து வைத்திருந்து விற்றுவிட்டார். சர்வே எண். 67/1 ல் 41 1/4 செண்ட், மற்றும் 68/10 ல் 53 3/4 செண்ட் அய்யாதுரைக்கு பூர்வீக சொத்தாக இருந்தது என்றால் சரிதான். மேற்படி சொத்தை 14.02.1974 ல் மண்ணாங்கட்டி குமாரர் ஆறுமுகம் என்பவருக்கு கிரையம் கொடுத்தார்கள். மேற்படி சொத்தை விற்று ஆடு, மாடுகள் வாங்கியும் , வட்டிக் கொடுத்தும் வழக்கு சொத்தை அய்யாதுரை வாங்கினார் என்றால் சரியல்ல. சொத்தை விற்ற பணம் கடனை அடைப்பதற்கே சரியாக இருந்தது.

II. அய்யாதுரை பெயரில் பொதுவாக கிரையம் பெற்றப்பட்டது என்றால் சரியல்ல. அய்யாதுரை ஆடு, மாடு மேற்தார், வட்டிக்கு பணம் வாங்கினார். வழக்கு சொத்தை கிரையம் பெறுதவற்கு வாங்கிய கடனை அடைப்பதற்காக தான் பூர்வீக சொத்தை அய்யா துரை விற்றார் என்றால் சரியல்ல.

**(மேற்கொண்டு குறுக்கு விசாரணைக்காக கால அவகாசம் கோரியதால் வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**